# அப்போஸ்தலருடைய நடபடிகள்

## சுவிஷேசத்தின் பரவுதல்

# இப்புத்தகத்தை குறித்து

- இந்தப் புத்தகத்தின் தலைப்பான அப்போஸ்தலருடைய நடபடிகள் கிரேக்க வார்த்தையான praxis என்னும் வார்த்தையில் இருந்து வந்தது. இந்த வார்த்தை ஆதிகால கிறிஸ்தவ ஆக்கங்களில் அப்போஸ்தலர்களின் அல்லது முக்கிய விசுவாசிகளின் பெரிதான செய்கையை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.
- அப்போஸ்தலருடைய நடபடிகள் லூக்கா நற்செய்தியின் தொடர்ச்சி. இரண்டும் அப்போஸ்தலனாகிய பவுலோடு பிரயாணத்தில் பங்கெடுத்துக்கொண்ட வைத்தியனான லூக்காவினால் எழுதப்பட்டது.
- லூக்கா தனது முதலாவது புத்தகமான லூக்கா எழுதின சுவிஷேசம் பற்றி சொல்லும்போது “இயேசு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து” எழுதியதாக தெரிவிக்கிறார் (1:1-2)
- அப்போஸ்தலருடைய நடபடிகள் அதன் இரண்டாம்பாகம். இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின்பு பரிசுத்த ஆவியானவர் மூலமாக அப்போஸ்தலர்களை வழிநடத்தியதையும், உபதேசித்ததையும் குறித்த வரலாற்றுப்பதிவு.
- சபையின் முதல் 30-35 ஆண்டுகள் வரலாற்றை இந்தப் புத்தகம் சொல்லுகிறது.
- முதல் 12 அதிகாரங்களிலும் பிரதானமானராக இருப்பவர் பேதுரு. இறுதி 16 அதிகாரங்களிலும் பிரதானமானராக இருப்பவர் பவுல்.

# இப்புத்தகத்தை குறித்து

- அப்போஸ்தலருடைய நடபடிகளில் விபரிக்கப்பட்டுள்ள சம்பவங்களில் சில குறிப்பிட்டுள்ள சம்பவங்களில் இந்தப் புத்தகத்தின் ஆக்கியோன் பவுலுடைய பயணத்துணையாக தான் இருந்ததை குறிப்பிடுகிறார். (16:10-17,20:5-21:18,27:1-28:16).
- “நாங்கள்” என்று குறிப்பிடுகிற இந்த வேதபகுதிகளில் பவுல் ரோமாபுரியில் சிறைவைக்கப்பட்டிருந்த இரண்டு ஆண்டுகளும் அடங்கும் (அதி 28).
- இந்த சிறைவாசத்தின்போதுதான் பவுல் மற்ற நிருபங்களோடு பிலமோன், கொலோசேயர் போன்ற நிருபங்களையும் எழுதினார்.
- இந்த இரண்டு நிருபங்களில் தன்னுடன் இருப்பவர்கள் என்று அவர் குறிப்பிடும் நபர்களில் லூ க்காவின் பெயரும் இடம்பெற்றுள்ளது. (கொலோ 4:9-17, பில 23-24)
- லூக்கா கிபி 64-68 காலப்பகுதியில் நிகழ்ந்த பவுலின் மரணத்தையோ அல்லது கிபி 64ல் நீரோ மன்னனின் காலத்தில் கிறீஸ்தவர்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தையோ குறிப்பிடவில்லை.
- அதற்கு காரணம், இந்தப் புத்தகம் இந்த இரண்டு நிகழ்வுகளும் நடப்பதற்கு முன்னால் கிபி 60-62 காலப்பகுதியில், பவுல் மேல்முறையீடு செய்து அதன் முடிவுக்காக சிறையில் காத்திருந்த வேளையில் எழுதிமுடிக்கப்பட்டிருக்கலாம்.
    - அதிகாரங்கள் 28
    - வசனங்கள் 100

# இந்தப் புத்தககம் ஒரு இணைக்கும் பாலம்

- இந்தப் புத்தகம் இல்லாமல் ஆதித்திருச்சபையை குறித்த காரியங்களை நாம் அறிந்திருக்க முடியாது. இது இல்லாமல் போயிருக்குமானால் பவுல் எழுதிய நிருபங்களின் கருத்தை பூரணமாக நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும்.
- அ) கிறிஸ்துவையும் சபையையும் இணைக்கும் பாலம்
- இயேசு செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கியவற்றை (1:1) சொன்ன சுவிஷேசத்தின் தொடர்ச்சியாக அவர் அப்போஸ்தலர்கள் மூலமாக செய்ததும், உபதேசித்ததும், சபையை ஸ்தாபித்ததுமான காரியங்களை இந்தப் புத்தகம் விளக்குகிறது.
- ஆ) சுவிஷேசத்தையும் நிருபங்களையும் இணைக்கும் பாலம்
- இந்தப் புத்தகம் சுவிஷேசத்தில் சொல்லப்பட்டவற்றிக்கும் அப்போஸ்தலர்களின் நிருபங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பை உண்டாக்குகிறது.
- அப்போஸ்தலருடைய நடபடிகள் இயேசு பரமேறிய நாளிலிருந்து புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் தொகுக்கப்பட்ட காலம் வரையிலான இடைநிலைக் காலத்தின் சம்பவங்களை சொல்லுகிறது.
- இ) இரண்டு உடன்படிக்கைகளையும் இணைக்கும் பாலம்
- அப்போஸ்தலருடைய நடபடிகள் புதிய, பழைய உடன்படிக்கைகளுக் கிடையான மாறுதலை சுட்டிக்காட்ட பயன்படுகிறது.

# இந்தப் புத்தககம் ஒரு இணைக்கும் பாலம்

- பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தில் மாற்றம். பழைய எற்பாட்டில் அவரது பிரதான ஊழியம் தேவனுடைய ஜனங்களை வெளியரங்கமாக அபிஷேகம் செய்வதாக இருந்தது. மோசே(எண்11:17), ஒத்னியேல் (நியா 3:8-10), கிதியோன் (நியா 6:34), சவுல் (1சாமு 10:6-10) ஆகியோர் அவர்களில் சிலர்.
- இயேசு பரமேறிய பின்னால் ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியின் இருதயங்களிலும் வாசம் செய்து (ரோம 8:9-11, 1கொரி 3:16) அவர்களுக்குள் இருந்து அவர்களை வழிநடத்தி, அவர்களை பெலப்படுத்துகிறார்.
- ஈ) யூதர்களையும், புறஜாதிகளையும் இணைக்கும் பாலம்
- இந்தப் புத்தகம் சபையானது முழுவதும் யூதர்களுக்கு மாத்திரமேயானது என்னும் நிலையில் இருந்து பறஜாதியாருக்கும், சர்வதேசங்களுக்கும் உரியது என்பதை பதிவுசெய்கிறது.
- அப் 10:9-15ல் பேதுருவுக்கு காண்பிக்கப்பட்ட துப்பட்டியில் அசுத்த ஜீவராசிகள் இருப்பதாக காட்டப்பட்ட தரிசனம் பழைய உடன்படிக்கையிலிருந்து யூதர்களும் புறஜாதியாரும் இணைந்திருக்கிற புதிய உடன்படிக்கையின் ஒரே உலகளாவிய திருச்சபையாக மாற்றப்படுவதற்கான அடையாளம்.
- கிறிஸ்தவத்திற்கும், யூதமார்க்கத்திற்கும் இடையேயான இடைவெளி அதிகரிப்பதை இந்தப் புத்தகம் எடுத்துக்காட்டுகிறது.

# சாட்சிபகர்ந்த 7 இடங்கள்

- அப்போஸ்தலருடைய நடபடிகள் சபையானது பிறந்து, உருவாகி எருசலேமிலிருந்து ரோமாபுரிவரை விரிவடைந்த வரலாற்றை கொண்டது.
- முப்பது ஆண்டுகளுக்குள்ளாக எருசலேமில் பயந்துகொண்டிருந்த சிறுகூட்டமான விசுவாசிகள், ஒரு பேரரசின் எல்லையெங்கும் தங்களது வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த விரிந்து பரந்த மக்கள் இயக்கமாக மாற்றினார்கள்.
- அதன் ஒரு உச்சக்கட்டமாக, முன்பு சபையை உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த பவுலை தமது சுவிஷேசத்தை இந்த பேரரசில் உயர்ந்த அதிகாரமுடையவனான ரோம சக்கரவர்த்திக்கு அறிவிக்க தேவன் பயன்படுத்தினார்.

1. எருசலேமில் சாட்சிபகருதல் (2:14–5:42)
2. எருசலேமிற்கு அப்பால் சாட்சிபகருதல் (6:1–12:25)
3. சீப்பருவிலும், கலாத்தியாவின் தென்பகுதியிலும் சாட்சிபகருதல் (13:1–14:28)
4. கிரேக்கத்தில் சாட்சிபகருதல் (15:36–18:22)
5. எபேசுவில் சாட்சிபகருதல் (18:23–21:16)
6. செசரியாவில் சாட்சிபகருதல் (24:1–26:32)
7. ரோமாபுரியில் சாட்சிபகருதல் (27:1–28:31)

## ஊக்கமாய் சாட்சிபகர்வதில் உள்ள 7 அம்சங்கள்

1. சாட்சிபகர்தல் உலகளாவியது: யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின்கடைசிபரியந்தமும், (1:8)
2. சாட்சிபகர்தல் சகலவிதமானவர்களையும் உள்ளடக்கியது: (அதி 2–5,10:1–11:18,14:8-18, 16:11–15,25–34,17:22–31)
3. சாட்சிபகர நம்மை பரிசுத்த ஆவியானவர் பெலப்படுத்துகிறார் (1:8,2:1–13,8:17,13:2–12,19:6) சபையானது சாட்சிபகர தேவன் வழிநடத்துகிறார் (4:5–22,23:12–22,24:1–23,27:21–26)

(எருசலேமிலிருந்து ரோமாபுரிவரை சுவிஷேசத்தை எடுத்துச் சென்றதும், ரோம பேரரசின் ஆட்சிப்பகுதி முழுவதிலும் ஸ்தல சபைகளை நிறுவியதுமான சபையின் வெற்றியானது கிறிஸ்தவம் என்பது வெறுமனே மனித முயற்சியல்ல என்பதற்கு சான்றாக விளங்கியது)

4. ஊக்கமாய் சாட்சிபகர வேண்டுமானால் சபை ஒற்றுமையுடன் இருக்கவேண்டும்(2:42–47,4:32–37,5:12–14).
5. சாட்சி பகருதலின் முக்கிய பகுதி இயேசுவின் உயிர்த்தெழுதல் (1:22,2:22–36,17:30–31).
6. சாட்சிபகருகிறவர்கள் உலகத்திற்கு முன்பாக உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் (18:12–15,23:29,25:18,26:31–32).
7. கிறிஸ்துவைக் குறித்து சாட்சிபகருவதின் நிமித்தமாய் வரக்கூடிய பாடுகளையும், மரணத்தையும்கூட ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும். (5:41–42,7:54–60).

# நற்செய்தி அறிவித்தல் குறித்த 10 ஆய்வுகள்

1. பெந்தகோஸ்தே நாளில் 3000 பேர்கள் 2:37-41
2. சமாரியர்கள் 8:12
3. மாயவித்தைக்காரனான சீமோன் 8:13
4. எதியோப்பிய மந்திரி 8:26-40
5. சவுல் (பவுல்) 9:3-18
6. கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் 10:34-48
7. லீதியாளும் அவள் வீட்டாரும் 16:11-15
8. பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரனும் அவனது குடும்பமும் 16:25-34
9. கொரிந்தியர்கள் 18:8
10. எபேசுவில் 12 மனிதர்கள் 19:1-7

# பேதுரு - பவுல்

- அப்போஸ்தலருடைய நடபடிகளில் அப்போஸ்தலனாக பவுல் செய்த ஊழியம் அப்போஸ்தலனான பேதுருவோடு ஒப்பிட்டே மதிப்பிடப்பட்டது.
- இருவருமே சப்பாணியாய் இருந்தவனை குணமாக்கினார்கள் (3:1-10) (14:8-10)
- பேதுருவின் நிழல்பட்டு வியாதியுள்ளவர்கள் சுகம்பெற்றார்கள் (5:15,16), பவுலின்
- உறுமால்களையும் கச்சைகளையும் வியாதியுள்ளவர்கள் மேல் போட்டபோது சுகம்பெற்றார்கள் (19:12)
- இருவருமே யூதர்களின் வெறுப்பிற்கு ஆளானார்கள் (5:17,13:45)
- இருவருமே மாயவித்தைகாரர்களுக்கு எதிர்த்து நின்றார்கள் (8:9-24,13:6-11)
- இருவருமே மரித்தவர்களை உயிரோட எழுப்பினார்கள் (9:36-41,20:9-12)
- இருவருமே சிறையில் அடைபட்டு அதிசயமாக விடுவிக்கப்பட்டார்கள்(12:3-19,16:25-34)

# பவுலின் முதலாவது மிஷனரிப் பயணம்

* பவுலின் முதலாவது மிஷனரிப் பயணம் 13:4–14
* 2 ஆண்டுகள்
* 1235 மைல்கள் பிரயாணம்
* பவுலும், பர்னபாவும் தென்பகுதியில் உள்ள சின்னஆசியாவிற்கு கப்பல் பிரயாணம் செய்வதற்கு முன்பு பர்னபாவின் சொந்தப்பகுதியான சீப்புருக்குக்கு சென்றார்கள்.
* அவர்கள் பம்பிலியாவிலுள்ள பெர்கே பட்டணத்தில் சேர்ந்தபோது யோவான்மாற்கு அந்தக்குழுவினரை விட்டுவிட்டு எருசலேமிற்கு திரும்பினார்.
* பிசீதியாவில் உள்ள அந்தியோகியா, இக்கோனியா, லிஸ்தீரா, தெர்பை போன்ற பகுதிகளுக்கு பவுலும், பர்னபாவும் சென்றபோது ஒவ்வொரு பட்டணத்திலுமிருந்த யூத மதத்தலைவர்கள் அவாகள்மேல் பொறாமைகொண்டு அவர்களை விரட்டினார்கள்.
* பின்பு அதே திசையில் பயணித்து புதிய சபைகளை பலப்படுத்தினார்கள்.
* அத்தாலியாவிலிருந்து சீரியாவிலுள்ள அந்தியோகியா என்னும் சொந்த ஊருக்கு பயணமானார்கள்.

# பவுலின் இரண்டாவது மிஷனரிப் பயணம்

- பவுலின் இரண்டாவது மிஷனரிப் பயணம் 15:36–18:22
- 3 ஆண்டுகள்
- 2703க்கும் அதிகமான மைல்கள் பிரயாணம்
- பவுலும்,சீலாவும் பவுல் முன்பு தனது முதலாவது மிஷனரிப் பயணத்தின்போது பிரசங்கித்திருந்த சின்னஆசியாவின் இடங்களுக்கு திரும்பவும் சென்றார்கள்.
- அதேவேளை பர்னபா யோவான்மாற்கை அழைத்துக்கொண்டு சீப்புருவுக்கு சென்றார்.
- பவுலும் சீலாவும் தெர்பைக்கும், லிஸ்திராவுக்கும், பிசிதீயாவிலுள்ள அந்தியோகியா விற்கும் சென்றார்கள்.
- அங்கிருந்து பவுலும் சீலாவும் துரோவாக்கு பயணித்தார்கள் அங்கு ஒருவன் தங்களை மக்கேதொனியாவுக்கு அழைப்பதாக பவுல் தரிசனம் கண்டார்.
- ஐரோப்பாவின் குறுக்காக Egnatian பாதை என்று அழைக்கப்படும் பாதையில் உள்ள பல இடங்களை கடந்து அத்தனே பட்டணத்திற்கும், கிரேக்கத்தின் தென்பகுதியில் உள்ள கொரிந்து பட்டணத்திற்கும் சென்றார்கள்.
- பின்பு எபேசுவிற்கும், செசரியாவிற்கும் பயணித்து அங்கிருந்து சீரியாவின் அந்தியோகியாவிற்கு திரும்புமுன் எருசலேம் சபைக்கு சென்றார்கள்.

# பவுலின் மூன்றாது மிஷனரிப் பயணம்

- பவுலின் மூன்றாவது மிஷனரிப் பயணம் 18:22–21:17
- 3 ஆண்டுகள்
- 2515 மைல்கள் பிரயாணம்
- பவுலின் மூன்றாவது மிஷனரிப் பயணம் கிட்டதட்ட அவரது இரண்டாவது மிஷனரிப் பயணப்பாதையிலேயே இருந்தது.
- கலாத்தியா, பிரிகியா பகுதிகளின் ஊடாகச் சென்று நேராக பெரிய துறைமுகப் பட்டணமான எபேசுவிற்கு சென்றார்.
- மூன்று ஆண்டுகள் பிரசங்கித்து, உபதேசித்த பின்பு பவுல் மீண்டும் மக்கேதோனியா, அகாயா வழியாக பயணித்து விசுவாசிகளை திடப்படுத்தினார்.
- பின்பு எருசலேமில் தனது பயணத்தை முடித்தார்.

# அப்போஸ்தலருடைய நடபடிகளின் முக்கிய பகுதிகள்

**I.** பரிசுத்த ஆவியின் மூலமாக அப்போஸ்தலர்களைகொண்டு எருசலேமில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிரியை நடப்பித்தல் அதி 1-7

A. பரிசுத்த ஆவியின் வருகைக்காக ஆயத்தப்படுத்துதல் அதி 1

1. முன்னுரை வச 1,2
2. உயிர்த்தெழுந்தபின் இயேசுவின் 40 நாட்கள் ஊழியம் வச 3-9
3. இயேசுவின் பரமேறுதலும் மீண்டும் வருவேன் என்ற வாக்குத்தத்தமும் வச 10-11
4. பரிசுத்த ஆவிக்காக காத்திருத்தல் வச 12-14
5. புதிய அப்போஸ்தலர் நியமனம் வச 15-26

B. பெந்தகோஸ்தே நாள் (பரிசுத்த ஆவியானவரின் பெத்தலகேம்) அதி 2

1. பரிசுத்த ஆவியானவரின் வருகை வச 1-13
2. சபையின் காலத்தில் பேதுரு செய்த 1வது பிரசங்கம் வச 14-47

C. சபையின் முதலாவது அற்புதம்: பேதுரு செய்த 2வது பிரசங்கம் அதி 3

1. சப்பாணியை சுகமாக்குதல் வச 1-11
2. பேதுருவின் விளக்கமான, வேண்டுகோள் விடுக்கும் பிரசங்கம் வச 12-26
3. முடிவில் 5000 பேர் விசுவாசிகளாதல் 4:4

D. சபையின் 1வது உபத்திரவம்: பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அதி 4

E. அனனியா,சப்பீராளின் மரணங்கள்: 2வது உபத்திரவம் அதி 5

(உள்ளே ஒழுங்கு நடவடிக்கை: வெளியே உபத்திரவம்)

F. மூப்பர்கள் நியமனம், மூப்பனான ஸ்தேவானின் சாட்சி அதி 6

G. ஸ்தேவானின் உரையும் இரத்தசாட்சி மரணமும் (1வது இரத்தசாட்சி) அதி 7

# அப்போஸ்தலருடைய நடபடிகளின் முக்கிய பகுதிகள்

II. பரிசுத்த ஆவியின் மூலமாக அப்போஸ்தலர்களைகொண்டு யூதேயாவிலும், சமாரியாவிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிரியை நடப்பித்தல் அதி 8-12

A. எதியோப்பிய மந்திரியின் மனந்திரும்புதல் (காமின் குமாரன்) அதி 8

B. தர்சு பட்டணத்து சவுலின் மனந்திரும்புதல் (சேமின் குமாரன்) அதி 9

C. ரோம நூற்றுக்கு அதிபதியின் மனந்திரும்புதல் (யாபேத்தின் குமாரன்) அதி 10

D. பேதுரு தனது ஊழியத்தின் நியாயத்திற்காக வாதிடல்: அந்தியோகியாவிற்கு சுவிஷேசம் செல்லுதல் அதி 11

E. யாக்கோபுவின மரணம்: பேதுருவின் கைது அதி 12

III. பரிசுத்த ஆவியின் மூலமாக அப்போஸ்தலர்களைகொண்டு பூமியின் கடையாந்திரங்களிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிரியை நடப்பித்தல் அதி 13-28

A. பவுலின் 1வது மிஷனரி பயணம் அதி 13-14

B. எருசலேம் சபை கூடல் அதி 15

C. பவுலின் 2வது மிஷனரி பயணம் அதி 15:36—16:40

D. 2வது மிஷனரி பயணம் (தொடர்தல்) பவுல் தெசலோனிக்கேயாவிலும், அத்தனேயிலும் அதி 17

E. 2வது மிஷனரி பயணம் (முடிவடைதல்) பவுல் கொரிந்துவிலும், அப்பல்லோ எபேசுவிலும் அதி 18

F. பவுலின் 2வது மிஷனரி பயணம் அதி 18:23—21:14

பவுல் எபேசுவில் அதி 19

# அப்போஸ்தலருடைய நடபடிகளின் முக்கிய பகுதிகள்

G. பவுலின் 3வது மிஷனரி பயணம் (தொடர்தல்), அதி 20

H. பவுல் எருசலேமுக்கு சென்று அங்கு கைதுசெய்யபடுதல் அதி 21

I. எருசலேமில் தனக்கு எதிராக கூடிய கூட்டத்திற்கு எதிராக பவுல் வாதிடல் அதி 22

J. ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பவுல் வாதிடல் அதி 23

K. பேலிக்ஸ்க்கு முன்பாக பவுல் அதி 24

L. பெஸ்துவிற்கு முன்பாக பவுல் அதி 25

M. அகரிப்பாவிற்கு முன்பாக பவுல் அதி 26

N. புயல், கப்பற்சேதத்தின் மத்தியில் பவுலின் ரோமாபுரிப் பயணம் அதி 27

O. பவுல் ரோமாபுரியை அடைதல் அதி 28

(இறுதியாக கண்டபொழுது புறஜாதிகளுக்கு பிரசங்கித்துக்கொண்டிருந்தார்